ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.9 – கைம்மானம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.9 – கைம்மானம்

‡ கைம் மான மத யானை ⋆
இடர் தீர்த்த கரு முகிலை ⋆
மைம் மான மணியை ⋆
அணி கொள் மரதகத்தை ⋆
எம்மானை எம்பிரானை ஈசனை ⋆
என் மனத்துள் அம்மானை ⋆
அடியேன் ⋆
அடைந்துய்ந்து போனேனே ‖ **8.9.1** ‖

தரு மான மழை முகிலைப் ⋆
பிரியாது தன் அடைந்தார் ⋆
வரு மானம் தவிர்க்கும் ⋆
மணியை அணி உருவில் ⋆
திருமாலை அம்மானை அமுதத்தைக் ⋆
கடல் கிடந்த பெருமானை ⋆
அடியேன் ⋆
அடைந்துய்ந்து பிழைத்தேனே ‖ **8.9.2** ‖

விடை ஏழ் அன்றடர்த்து ⋆
வெகுண்டு விலங்கல் உறப் ⋆
படையால் ஆழி தட்ட ⋆
பரமன் பரஞ்சோதி ⋆
மடை ஆர் நீலம் மல்கும் வயல் சூழ் ⋆

கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு ⋆
அடியேன் ⋆
ஒருவர்க்குரியேனோ ‖ **8.9.3** ‖

‡ மிக்கானை ⋆
மறையாய் விரிந்த விளக்கை ⋆
என்னுள் புக்கானைப் ⋆
புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை ⋆
தக்கானைக் ⋆
கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த ⋆
அக்காரக் கனியை ⋆
அடைந்துய்ந்து போனேனே ‖ **8.9.4** ‖

வந்தாய் என் மனத்தே ⋆
வந்து நீ புகுந்த பின்னை ⋆
எந்தாய் ! போய் அறியாய் ⋆
இதுவே அமையாதோ ⋆
கொந்தார் பைம் பொழில் சூழ் ⋆
குடந்தைக் கிடந்துகந்த மைந்தா ⋆
உன்னை என்றும் ⋆
மறவாமைப் பெற்றேனே ‖ **8.9.5** ‖

எஞ்சா வெந்நரகத்து ⋆
அழுந்தி நடுங்குகின்றேற்கு ⋆
அஞ்சேல் என்றடியேனை ⋆
ஆட்கொள்ள வல்லானை ⋆
நெஞ்சே ! நீ நினையாது ⋆
இறைப் பொழுதும் இருத்தி கண்டாய் ⋆

மஞ்சார் மாளிகை சூழ் ⋆
வயல் ஆலி மைந்தனையே ॥ **8.9.6** ॥

பெற்றார் பெற்றொழிந்தார் ⋆
பின்னும் நின்றடியேனுக்கு ⋆
உற்றானாய் வளர்த்து ⋆
என் உயிர் ஆகி நின்றானை ⋆
முற்றா மாமதி கோள் ⋆
விடுத்தானை எம்மானை ⋆
எத்தால் யான் மறக்கேன் ⋆
இது சொல்லென் ஏழை நெஞ்சே ! ॥ **8.9.7** ॥

கற்றார் பற்றறுக்கும் ⋆
பிறவிப் பெருங்கடலே ⋆
பற்றா வந்தடியேன் ⋆
பிறந்தேன் பிறந்த பின்னை ⋆
வற்றா நீர் வயல் சூழ் ⋆
வயல் ஆலி அம்மானைப் பெற்றேன் ⋆
பெற்றதுவும் ⋆
பிறவாமை பெற்றேனே ॥ **8.9.8** ॥

கண்ணார் கண்ணபுரம் ⋆
கடிகை கடி கமழும் ⋆
தண்ணார் தாமரை சூழ் ⋆
தலைச்சங்க மேல் திசையுள் ⋆
விண்ணோர் நாண்மதியை ⋆
விரிகின்ற வெஞ்சுடரை ⋆

கண்ணாரக் கண்டு கொண்டு ⋆
களிக்கின்றதிங்கென்று கொலோ ॥ **8.9.9** ॥

‡ செரு நீர வேல் வலவன் ⋆
கலிகன்றி மங்கையர் கோன் ⋆
கரு நீர் முகில் வண்ணன் ⋆
கண்ணபுரத்தானை ⋆
இரு நீரின் தமிழ் ⋆
இன் இசை மாலைகள் கொண்டு தொண்டீர் ⋆
வரு நீர் வையம் உய்ய ⋆
இவை பாடி ஆடுமினே ॥ **8.9.10** ॥

அடிவரவு — கைம்மானம் தரு விடை மிக்கானை வந்தாய் எஞ்சா பெற்றார் கற்றார் கண்ணார் செரு வண்டார்

கைம்மானம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்